சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண ஹு புரட்டாதிமீ கஉ (1944 செப்டம்பர்மீ 28 வியாழக்கிழமை) [இல சஅ

# பிரிட்டிஷ்டாங்கிகள் ஜெர்மன்எல்லையைக்கடந்துவிட்டன

## 1077 ஜெர்மன் டாங்கிகள் சேதம்

## லெக்நதி கடக்கப்பட்டுவிட்டது

ஆர்ன்ஹெமில் நிலைமை மாறி வருகிறது. லெக் நதியின் தென் கரையை அடைந்த பிரிட்டிஷ் இரண்டாவது சேனையைச் சேர்ந்த ரோந்துப் படைகள், சனிக்கிழமை இரவு காரிருளில் நதியைக் கடந்து விமானப்படைகளுடன் சேர்ந்துவிட்டன. அவர்களைத் தொடர்ந்து மேலும் சைனியங்கள் இறக்கப்பட்டனவா என்பது பற்றி இன்னும் விவரம் தெரியாது. ஆனால், இவ்விரு படைகளுக்குமிடையில் இதுவரை பலம் வாய்ந்த எவ்வித பிணைப்பும் ஏற்படவில்லை.

லண்டன், செப் 25

விமானச் சேனையைச் சேர்ந்த படைகள் ஆர்ன்ஹெமுக்கு மேற்கே தங்களை நன்கு ஸ்தாபித்துக் கொண்டதாகவும் அதனால் அதற்குப் பலத்த சேதமேற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. ஆரம்பத்தில் ஹாலந்தில் முதலாவது இறக்கப்பட்டபோது இருந்த பலத்தை விட இந்தப் படைகளுக்கு இப்போது பலம் அதிகரித்து விட்டதாகவும் அவர்களுக்கு அனுப்பட்ட உதவி தான் இதற்குக் காரணமென்றும் தெரிகிறது.

நிஜ்மெஜன் பகுதியில் ஜெர்மானியரின் எதிர்ப்பு பலமாக இருப்பினும் ஜெனரல் டிம்ஸியின் படைகள் ரைன் நதிக்குக் குறுக்கே தாங்கள் அமைத்திருக்கும் பால முனையை விஸ்தரித்துக்கொண்டன. இப்போது பிரிட்டிஷ் டாங்கிப்படைப் பிரிவுகள் லெக் நதியின் தென் கரையை அடைந்து விட்டன. ஆதலின் ஆர்ன்ஹெமிலிருக்கும் விமானச் சேனைக்கு நிவாரணம் கிடைக்கும் காலம் வெகு தூரத்திலில்லை.

ஆனால் பல நூற்றுக்கணக்கான கஜம் அகல முள்ள நதி இன்னமும் ஜெர்மன் பீரங்கிகளினால் தாக்கப்படுகிறது. ஆதலின் இந்த நதியைக் கடக்க முயற்சிப்பதினால் ஏராளமான சேதமேற்படலாம்.

முதலாவது சேனையைச் சேர்ந்த கனேடியத் துருப்புகள் பிரிட்டிஷ் படைகளின் கூடவே பாரிசத்தில் 10 மைல் தூரம் முன்னேறியிருக்கின்றன. ஸீக்பிரீட் அரணைநோக்கி அமெரிக்கர்கள் பாதுகாப்பு வரிசைகளுக்குள்ளேயே பல தளங்களைப் பிடித்துக்கொண்டனர். ஆகாயத்தளங்களின் உதவி கொண்டு இந்த மேற்குச் சுவரைத் தகர்த்தெறிவதற்காக அவர்கள் தளங்களைப் பலப்படுத்தி வருகின்றனர்.

முதலாவது சேனை போராடும் அரங்கத்தில் ஜெர்மன் எதிர்த்தாக்குதல்கள் வரவர வேகம் குன்றி வருகின்றன. அமெரிக்கர்கள் ஜெர்மன் தளங்கள்மீது பீரங்கிப் பிரயோகம் செய்து வருகின்றனர்.

அமெரிக்கர்கள் இதுவரை 183827 ஜெர்மனியர்களைக் கைதுசெய்திருக்கின்றனர். மூன்றாவது சேனையின் கைதிக்கூட்டில் 9,600 பேர் இருக்கின்றனர்.

நிஜ்மெஜனுக்குக் கிழக்கே நான்கு மைல் தூரத்தில் பிரிட்டிஷ் டாங்கிகள் ஜெர்மன் எல்லைப்புறத்தைக் கடந்து விட்டன. இவர்களிற் சில படையெடுப்புத் தினத்திலிருந்தே போராடி வருகின்றனர். ஒவ்வொரு மணிநேரமும் நிலைமை அபிவிருத்தியடைந்து வருகிறது. பிரிட்டிஷ் விமானச்சேனைக்கு உதவி அதிகமாக அனுப்பப்பட்டுவருகின்றது.

பல படைப்பிரிவுகள் நதியைக் கடந்துவிட்டன. ஆனால் ஜெர்மன் பீரங்கிகள் பல பக்கங்களிலிருந்தும் குண்டுப்பிரயோகம் செய்து வருகின்றன, சீக்கிரம் பலத்த ஒரு தாக்குதல் நடத்தாவிட்டால் நிலைமை மிக மோசமாகவிடும்.

நிஜமெஜனுக்குத் தென்கிழக்கே பிரிட்டிஷ் படைகள் ஜெர்மனிக்குள் ஒருமைல் தூரம் ஊடுருவிச்சென்று விட்டன. பீக் என்னுமிடத்தையும் அவைகள் பிடித்துவிட்டன. ரைன் நதியின் கீழ் பாகத்தை இருட்டில் சில துருப்புகள் கடந்துவிட்டன.

ஜெனரல் டெம்ஸியின் படைகள் எல்லா இடங்களிலும் ஹாலந்தில் ஜெர்மானியரைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன.

ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து 1077 ஜெர்மன் டாங்கிகளை மூன்றாவது சேனை மாத்திரம் முடமாக்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

---

### மவுண்ட்பேற்றன்சீமாட்டி இலங்கைக்குவருவார்

'ஸெயின்ட் ஜோன் அம்புலென்ஸ்' படையின் தாதிமார் பிரிவின் தலைமையதிகாரியாகிய (சுப்பிறின்ரென்டன்ற்) சீமாட்டி லூயி மவுண்ட் பேற்றன் தூரகிழக்குப் பிரதேசத்துக்கு விஜயம் செய்யலாமென்று ராய்ட்டரிடம் தெரிவித்தாராம், செஞ்சிலுவைச் சேவைப்படையும், ஸெனட்ஜோன் சேவைப்படையும் தூரகிழக்குப் பிரதேசத்தில் ஒன்றாக்கப்பட்டுவிடும் என்று அவர் அறிவித்துள்ளார்.

---

### யாழ்ப்பாணக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்

மேற்படிசங்கக் கொழும்புக் கிளையின் வருடாந்த விழா இம்மாதம் 30-ந் தேதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கொழும்பு மத்திய கிறிஸ்தவ வாலிபர்சங்கத்தில் நடைபெறும், திருவாளர்கள் எம். எஸ். ஆனெ, ஆர். ஈ. ஜயதிலக்க, கே. எஸ். அருள்நந்தி, கௌரவ டி. எஸ். சேனநாயக்கா ... சாரணையாளர் ... பொழுது ... கழித்துவார்கள்.

### "காந்தி—ஜின்னா சந்திப்பு பூரண சக்தி வாய்ந்தது"

#### ஸ்ரீ. பி. எம். பிர்லா பிரசங்கம்

கல்கத்தா செப் 22—

இன்று கல்கத்தா இந்திய வியாபாரிகள் சங்கம் மூன்றுமாதத்திற் கொருமுறை கூடும் கூட்டத்தில் பேசும்பொழுது அதன் தலைவர் ஸ்ரீ பி. எம். பிர்லா சொன்னதாவது:—

'காந்திஜி-ஜின்னா சந்திப்பு பூரண சக்தி வாய்ந்தது. சம்பந்தப்பட்ட யாவருக்கும் நேர்மையும் கிரந்தமானதாயுமிருக்கக் கூடிய முடிவிற்கு அவ்விருவரும் வரவேண்டுமென நாட்டின் நிலைபெற்ற நலத்தை இதயத்தில் கொண்டுள்ள மக்கள் யாவரும் விரும்புகின்றனர்.

காந்திஜியின் உருவான திட்டங்களை, விவாதத்திற்கு அடிப்படையாகக் கொள்ள வைஸ்ராய் மறுத்ததற்காக நான் பெரிதும் வருந்துகிறேன்.

பிரிட்டிஷ் அரசாங்கம் வைஸ்ராய் நிர்வாகசபையை விஸ்தரிக்கவல்லாது, தேசீய அரசாங்கத்தை அமைக்க விரும்பவில்லையென்பது வெளிப்படை. அதிகாரத்தைக் கைவிடும் உணர்ச்சியில இங்கிலாந்து இல்லை. இதுவே பூரண விஷயத்தையொட்டிய, மனக்கசப்பளிக்கும் உண்மையாகும்.

ஆனால் இந்தியாவின் பொருளாதார நலத்தைக் கருதினால் தேசீய அரசாங்கம் உடனே அமைக்கப்படவேண்டியது அத்தியாவசியமானது. பொருளாதாரச் சங்கடத்தைப் பேசிப்பேசி, இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்தை நழுவவிடவேண்டுமென்பதே அரசினரின விருப்பமென்பது நாட்டில் பொதுவான நம்பிக்கை. பொருளாதாரச் சுதந்திரம், அரசியல் சுதந்திரத்திற்கு வழிகாட்டுமெனக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் அரசியல், அடிமை நிலையில் விருத்தியவாறு பொருளாதார அபிவிருத்தி யேற்பட்டதாக எவரும் கேட்டிருக்கின்றனரா?

பொருளாதார அபிவிருத்தியெனில் இங்கிலாந்தின் கையில் சகல அதிகாரங்களையும் வைத்துக் கொண்டதன்மூலம் ஆங்கில கம்பெனிகள் சுரண்டுவது என்பதேயாம்.

---

### டச்சு ராணிக்கு உயர்தர பட்டம்

லண்டன் செப் 24

டச்சு ராணி வில்ஹெல்மினாவுக்கு இன்று மாக்ஷிமைதங்கிய மன்னர்பிரான் 'ஆர்டர் ஆப் தி கார்டர்' என்னும் பட்டத்தை வழங்கினார். இந்த உயர்ந்த பட்டம் கிடைத்த முதலாவது ஆளும் ராணி இவர்தான்.

### சுகாதாரமந்திரியின் யாழ்ப்பாண விஜயம்

சுகாதார மந்திரி திரு. ஜியார்ஜ் இ. டி. சில்வா சுகாதார மந்திரிகாரியாலயக்காரியதரிசி திரு. எச். எஸ். அமரசிங்காவுடன் யாழ்ப்பாணத்திற்கு சென்ற சனிக்கிழமை வந்து சேர்ந்தார்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியோடு தொடர்பாக ஒரு பிரசவ விடுதி கட்டுவதற்காக திரு டி. சில்வா அத்திவாரக்கல் நாட்டினார். அப்பிரசவ விடுதியைக் கட்டிமுடிப்பதற்குரிய செலவுகளுக்கு ரூபா 1,50000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அரியாலை என்னும் கிராமத்தில் ஒரு பிரசவ விடுதி கட்டுவதற்காக திரு. என். நடராசா கே. வி. அதற்கான ஒரு நிலமும் 10000 ரூபாவும் மந்திரி காரியாலயத்திற்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறார்.

அச்சுவேலியில் கிராம ஆஸ்பத்திரி ஒன்று கட்டுவதற்காக திரு. வ. காசிநாதர் அதற்குத்தக்க இடம் ஒன்றும் 10000 ரூபாவும்மந்திரிகாரியாலயத்திற்கு நன்கொடையளித்திருக்கிறார்.

---

### ஜெர்மன் கவசத்தைத் துளைக்கவல்ல அமெரிக்க எரிகுண்டுகள்

அமெரிக்க யுத்தக் காரியாலயம் தெரிவிப்பதாவது:- அமெரிக்கயுத்த தளவாட காரியாலயம் ஜெர்மன் கவசங்களைத் துளைத்து உட்சென்று தீப்பற்றுமாறு செய்யவல்ல எரிகுண்டுகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர், இது எல்லா யுத்தமுனைகளிலுமுள்ள அமெரிக்கவிமானிகளால் தாராளமாக உபயோகிக்கப்படுகிறது. ஜெர்மானியர் தங்களது விமானங்களுக்கும் டாங்கிகளுக்கும் கவசம் போட்டிருப்பதால் அதனை அழிப்பதற்காக இந்தக் குண்டுகளை உபயோகிக்கப்படுகின்றன. இந்தப் புதுமாதிரிக் குண்டு ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இது ஐரோப்பாவிலும், தென் பஸிபிக்கிலுமுள்ள விமானப் படைகளுக்கு உதவப்படும்.

---

### இந்தியாவில் கற்பூர விலைக்கட்டுப்பாடு

இந்திய அரசாங்க கெஜட் அறிக்கையொன்று கூறுவதாவது:- கற்பூர விலைகள் இறக்குமதி செய்பவர்கள், உற்பத்தி செய்பவர்கள், சில்லறை வியாபாரிகள் முதலியோர் விற்கக்கூடிய அதிக பக்ஷ விலைகளை அரசினர் நிர்ணயித்திருக்கிறார்கள். கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், 1 அவுன்ஸ் கட்டிகளின் சில்லறை விற்பனை விலை முறையே 2 அணா, 4 அணா, 7 அணாவாக நிர்ணயிக்கப்பட வேண்டியிருக்கிறது. 1 ருத்தல கட்டியின் சில்லறைவிலை ரூபா 6 அணா 1. கற்பூர விற்பனையாளர் எல்லா வியாபாரிகளும் விலைகளை ஒழுங்காகத் தொங்கவிடவேண்டுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி ஷேக்ஸ்பியர்

கொழும்புத்துறை பண்டித வி. கே. பி. நாதன்

வில்லியம் ஷேக்ஸ்பியர் (William Shakespeare) ஒரு உலகமகாகவி. நம்நாட்டுப்புலவர் பெருமக்களான திருவள்ளுவர், காளிதாஸன், கம்பன், இளங்கோவடிகள் முதலியவர்களின் வரிசையில் வைத்தெண்ணத்தக்கவராவர். ஆகவே, அன்னாரின் சரித்திரத்தைத் தமிழ்மக்கள் அறிந்து கொள்வது மிகையாகாது. கவிகள் உலகிற்குப் பொதுவானவர்கள். எல்லாத் தேசத்தினரும் அவர்கள் உலகிற்குத் தந்துள்ள இலக்கியச்செல்வத்தை நுகர உரிமையுண்டு.

கி. பி. 1564-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இருபத்துமூன்றாந்தேதி இங்கிலாந்தின் சரித்திரத்தில், ஏன் உலகசரித்திரத்திலேயே ஒரு பிரசித்தி பெற்ற பொன்னாளாகும். அன்றுதான் இன்றைய உலகம்போற்றும் பிரபல ஆங்கில கவியும் நாடகாசிரியருமான (The master dramatist) வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்தார். இங்கிலாந்தில வார்விக்ஷயர் (War-Wickshire) என்னும் ஜில்லாவில் அவொன் (Avon) என்னும் அழகான நதி ஓடுகிறது. அதன்கரையிலுள்ள ஸ்ட்ராட்போர்ட் (Stratford) என்னும் ஒரு சிறு ஊரிலதான் இக்கவிஞர் பெருமான் பிறந்தார்.

இவர் தந்தையார் பெயர் ஜோன் ஷேக்ஸ்பியர். நமது கவிஞருக்கு கில்பர், றிச்சர்ட் என்ற இரு சகோதரர்களும், ஜோனு என்ற சகோதரியும் இருந்தனர். இளம் வயதிலேயே உள்ளூரில் இருந்த ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஷேக்ஸ்பியர் அனுப்பப்பட்டார். அங்கே லத்தீன பாஷையும், கிரேக்க மொழியும் சிறிது பயின்றார்.

ஜோன் ஷேக்ஸ்பியர் பரம்பரையான பணக்காரர் அல்ல; கசாப்புக் கடை வைத்தும், கம்பளி வியாபாரம் செய்தும் கொஞ்சம் பணம் சேர்க்கலானார். தமது சொந்தமுயற்சியினால் இவர் சிலவாண்டுகளில பணக்காரரானதோடு தனதூரில கௌரவமான பல உத்தியோகங்களையும வகிக்கலானார்.

1578-ம் ஆண்டு தொடக்கம் ஜோன் ஷேக்ஸ்பியருக்கு வரவர மீண்டும் சிரதசை ஆரம்பமாயிற்று என்று சொல்லலாம். இது சமயம நமது வில்லியம் ஷேக்ஸ்பியருக்கு வயது பதினான்கு. இவர் தந்தை தனமகன் படித்தது போதுமென்று நினைத்துப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்திவிட்டார். ஜோன ஷேக்ஸ்பியர் தனது மகனைக் "கிளப்புக்" (Club) கடைத்தொழிலில பயிற்றுவித்தாரென்றும சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இக்காலத்தில் வில்லியம ஷேக்ஸ்பியர் வீட்டிற்கு அருகாக ஸ. தொமஸ லூசி என்னும பெயருடைய ஜமீந்தார் ஒருவர் வசித்துவந்தார். அவருக்கு சார்லிகோட் என்னும ஒரு பூங்காவனமுண்டு. இதில புஷ்பங்கள பொலியும செடிகளும மரங்களும நிறைந்திருந்தன, அழகான கலைமானகள வரமைசத துள்ளிவிளையாடிக்கொண்டிருந்தன.

தோட்டத்தில் அப்பொழுது சில நாட்கள கலைமானகள களவுபோயக் கொண்டுவந்தன. இது ஸேர். தொமஸ லூசிக்குப் பெரிய மனவருத்தத்தைத் தந்தது. அதனால் ஒருநாள அதிகாலையிலேயே எழுந்து, தம்முடைய ஜமீன மனேஜரை அழைத்து, "என்ன, நேற்றும் ஆறு வயதுமான களவுபோயிற்றோ? இவ்விதம் கிழமைக்கொன்றாகக் களவுபோகப் பார்த்துக்கொண்டிருக்கலாமோ? இந்தத் திருட்டைக் கண்டுபிடிக்க யாரையேனும் காவல்வைத்தால் என்ன?" என்று கேட்டார்.

அதற்கு மானேஜர், "ஆமாம்; அதிலும், சிறந்த மான்களே களவுபோகின்றன. ஆதலால் திருட்டுப் பயல்களைப்பிடிக்கக் காவற்காரர்களை நியமித்திருக்கிறேன். அவர்கள், நேற்று இரவுதான் ஐந்தாறு பேர்க்கிரிகள ஒருமானைக் கொண்டுபோவதைக் கண்டார்களாம். அவர்களைப் பிடிப்பதற்காக ஓடினார்களாம். ஆனால இருட்டாயிருந்தபடியால் அந்தப் பயல்கள் எங்கேயோ மறைந்துவிட்டார்களாம்"; என்று சொன்னார்.

அதைக்கேட்டதும் ஜமீந்தார், "அப்படியா? ஆனால் அவர்கள் யாராயிருக்கக்கூடும்?" என்று கேட்டார். அதற்கு மனேஜர் "அதைப்பற்றிப் பக்கத்துக் கிராமத்தில் விசாரித்தேன், அங்கே இளைஞர்கள் அநேகர் தங்களைப்பற்றியும், மான்கள திருட்டுப்போவதைப்பற்றியும் அதிகம் கேலியாகப் பேசுகிறார்கள்; ஆயினும் அவர்கள்தான் திருடியவர்கள் என்று குற்றஞ் சாட்டுவது எப்படி?" என்று சொன்னார்.

"அது போகட்டும் காவற்காரர்கள் வந்து என்ன சொன்னார்கள்?"

"அந்தப் பயல்கள் தப்பி ஓடிவிட்டதாகச் சொன்னார்கள்; இன்னும் காவற்காரர்களில் இருவர் வரவில்லை. அவர்கள் வேறுபக்கத்தில் நின்றுகொண்டிருந்ததால் அவர்களுக்குத் திருடர்கள் வந்த விஷயம் தெரியாதோ, என்னவோ?"

அதன்பேரில் ஜமீந்தார், "ஆனால் ஜோன்! இந்தமாதிரியே விட்டுக்கொண்டிருந்தால் என்னவெல்லாம செய்யமாட்டார்கள்? இவர்களைப் பிடித்துத்தான் ஆகவேண்டும்" என்று கூறினார்.

அந்தச் சமயத்தில் வெளியே முற்றத்தில் யாரோ சனங்கள் இரைந்து பேசுவதுபோலக் கேட்டது. அடுத்த நிமிஷத்தில தோட்டக்காரர்களில் ஒருவன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே ஓடிவந்தான். அவன் ஓடிவந்தபடியால் அவனுக்குப் பேசமுடியவில்லை. ஆயினும் மூச்சுத் திணறிக்கொண்டே, "ஐயனே! ஒருத்தன அகப்பட்டுக்கொண்டான். அவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டார்கள். அவன் திமிறிக்கொண்டு ஓடிவிடப் பார்த்தானாம்; ஆனால் காவற்காரர்கள் விட்டார்களில்லை" என்று சொன்னான்.

"ஆகா! அப்படியா! அந்தப்பயல் எவன்?"

"ஐயனே! அவன் எவனோ அறியேன். அவனுக்கு இதேதான வேலையாம், அடிக்கடி இந்தமாதிரிக் களவுகளில் அகப்பட்டுக்கொண்டவனாம்."

"அவனை எங்கேபிடித்தார்கள்?"

"அவனை ஸ்ட்ராட்போட் சாலையோரமுள்ள வேலியருகில. அவன மானையும கொண்டுபோக எண்ணிவிட்டால, அவனைப பிடித்திருக்க முடியாதாம். அவன் வேலியைத் தாண்டிக் குதித்து ஓடிப்போயிருப்பானாம்."

"அப்படியா? அந்தப்பயல் எங்கே? அவனைக் கொண்டுவா? உம்! அந்தப பயலுக்கு அவ்வளவு துணிகரமா! ஆகட்டும், அவனைக்கொண்டுவா; [illegible]" என்று கேட்டார்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# கடவுள் ஆன்மநாயகர்

(குகதாசர் ச. சபாரத்தின முதலியார் எழுதிய கட்டுரை)

ஆன்மாக்களெல்லாம் கடவுளுக்கு அடிமைகளும் உடைமைகளுமாதலின் கடவுள் ஆன்மநாயகர் எனப்படுவர். அவருடைய நாயகத்தன்மை உலகத்துள்ள சீவர்க்கங்களுட் காணப்படும் நாயகத்தன்மை போல்வதன்று. உலகத்துள்ள நாயகத்தன்மைகளெல்லாம் இறைமைப்பொருட்கும் அடிமைப்பொருட்கும் பேதங்காட்டி நிற்கும். கடவுளுடைய நாயகத்தன்மை இங்ஙனம் யாதொரு பேதங்காட்டி நிற்பதில்லை; உலகத்துள்ள இறைமைப் பொருள்கள் அடிமைப் பொருள்களுடைய அமைதிக்குக் காரணமாவதில்லை. பரம காரணராகிய கடவுளோவென்றால அனைத்துயிர்களுடைய அமைதிக்கும் காரணராவர். உயிர்களுடைய அமைதிக்குக் கடவுள் காரணரென்பதனால அவர் உயிர்களைக் கடவுள் யாதொரு காலத்திற் சிருஷ்டித்தாரென்பது பெறப்படாது. ஆன்மாக்களெல்லாம் அநாதிநித்தப் பொருள்களாக, அந்த ஆன்மாக்கள அங்ஙனம அநாதிமுதற்கொண்டுள்ள அமைதி கடவுளையின்றிப் பெறப்படாதென்றபடியாம். ஆன்மாக்களெல்லாம கடவுளைத் தமக்கு ஆதாரமாகக்கொண்டு அநாதிதொட்டு அமைந்து விளங்குமென்பதுண்மைகளை சமய சாத்திரங்களால வற்புறுத்திச் சாதிக்கப்படும். இதுபற்றியே கடவுளுக்கும் ஆன்மாக்களுக்குமுள்ள சம்பந்தத்தை அத்துவித சம்பந்தமென்று எமது சமய நூல்கள எடுத்துக்காட்டும். அதாவது, ஆன்மாக்கள் தாமாக அமைந்துள்ள தனிமுதற் பொருள்களாய்க் கடவுளின் வேறாகவுள்ளன என்று சொல்வது ஒருவாற்றானும் கூடாதபடி, கடவுளும ஆன்மாக்களும் ஒருபொருளென்றாவது இரண்டு பொருள்களென்றாவது சொல்லுமாறில்லையாய், அத்துணை நெருங்கிய சம்பந்தமுடைய இரண்டு பதார்த்தங்களென்றவாறாம். இங்ஙனமாகிய நெருங்கிய சம்பந்தமுறை ஆன்மாக்களுடைய அனுபவங்களுக்கெல்லாம கடவுளை காரணராக்குவதாகலின், அவர் ஆன்மநாயகர் எனப்படுவர்.

அழிதன்மையத்தாகிய இந்த உலகத்திலே ஒரு நாயகியுடைய அனுபவங்களனைத்துக்கும் எங்ஙனம் நாயகன் காரணனாவனோ, அதில் அனந்தமடங்கு அதிகமாகக் கடவுள் ஆன்மாக்களுடைய அனுபவங்களுக்கெல்லாம் காரணராவர். இதுபற்றியே திருச்சிற்றம்பலக் கோவையார் முதலிய அடியார் வாக்குகளினும், காந்தம் முதலிய புராணங்களிலும், கடவுளுக்கும ஆன்மாவுக்கும் நாயகன் நாயகி பாவகங்கொடுத்து எடுத்து விளக்கியிருப்பது. உலகத்திலே சிற்றின்பபோகப் பொருட்டாக அமைக்கப்பட்டுள்ள நாயகன் நாயகி வழக்கும் பேரின்பத்துக்குக் காரணமாகிய கடவுளுடைய நாயகத்தன்மையையும் ஆன்மாக்களுடைய நாயகித்தன்மையையும் விளக்குதற் பொருட்டாக நிறுவப்பெற்றதோர் நியதியென்று சொல்லினும் இழுக்காகாது. கண்ணிரண்டும ஒருபொருளையே நோக்குவதுபோல எங்ஙனம நாயகனும் நாயகியும் ஒருபொருளை நோக்குவரோ, எங்ஙனம நாயகன் காட்டிய வழியே நாயகி காணுமாளோ, அங்ஙனமே கடவுளும் ஆன்மாவும தம்முள் உடங்கியைந்து நின்று ஒருபொருளையே காணுவர். கடவுள காட்டிய வழியே ஆன்மா எந்தக் காட்சியையாவது காணும். இதுபற்றியே "காண்பாரார் கண்ணுதலார் காட்டாக்காலே" என்றார் ஆன்றோரும்; நான் கும்பிடும்போது அரைக்கும்பிடு ஆதலால் என்று தாயுமானவர் எடுத்து மொழிந்தருளியதும் இக்கருத்தை விளக்குதற் பொருட்டேயாம்.

கடவுள் ஏவிய வழியே ஆன்மாக்கள் எந்தெந்தச் செயலையும் செய்வதுண்டாயின், அவர்கள் பாவவினைகளைச் செய்யுமிடத்தும் கடவுளே அவர்களையேவி அந்த வினைகளைச் செய்விக்கின்றாரெனபது பெறப்படுமன்றோ வெனின், இப்பதி உண்மையே. இந்த உண்மை பாரமார்த்திகத்தளவில எடுத்தாளத்தக்கதின்றி, லௌகிக வியவகாரார்த்தமாக எடுத்தாளத்தக்கதன்று. எல்லாம் கடவுள செயலென்பது அனுபவசித்தமாகக் காணவல்ல மெய்ஞ்ஞானிகள் மாத்திரமே இந்த உண்மையை எடுத்தாளத்தக்காரன்றி 'நான் எனது' என்னும் அகங்கார மமகாரங்கள விரவப்பெற்று எந்தச் செயலையும தாமே செய்வதாகக் கருதியிருக்கும் லௌகிகர் இதனை எடுத்தாளுதற்குரியாரல்லர். 'நான் செய்தேன்' என்னும் 'கோள்' இவர்களிடத்திலே எதுகாறுமுண்டோ அதுகாறும் அவர்களுக்கு அந்தச் செயலுக்குரிய பயன் ஊட்டப்பெறும்.

கடவுள் பாரமார்த்திகத் தளவிற்றான் ஆன்மாக்களைப் பாவஞ் செய்யுமாறு ஏவுதல் முறையாகுமோவெனின், இந்த ஆட்சேபத்துக்குச் சமாதானம நாம பலமுறையும் எடுத்துக் கூறியுள்ளோம். கடவுள் அங்ஙனம் ஆன்மாக்களை ஏவுவதெல்லாம் அவர்களுடைய பக்குவமாகிய தகுதிபற்றியேயாம். அவர்கள் தனித்தியங்கும் வன்மையிலராதலாலும், அவர்கள் இயங்கும் வழிப்பாவஞ் செய்தற்குரிய பக்குவமுடையராதலாலும், கடவுள் அவர்களை இயக்கிப் பாவத்தைச் செய்வித்து, அந்தப் பாவச் செயலுக்குரிய தண்டனையைக் கொடுத்து அவர்களைப் படிமுறையாகத் திருத்துவர். இது அவருடைய பெருங்கருணைத் திறமாமென்பதை உண்மையறிவுடையார் ஒருதலையாக ஒப்புவர். இதுவே அவர் எமக்கு நாயகத்தன்மை பூண்டமையால் எய்தும் பெரும் பிரயோசனமாமென்க.


## பொதுஜனப் பாதுகாப்புப்பகுதி

### கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

வருடாந்தக் கையிருப்பைக் கணக்கெடுப்பதற்காக எல்லாக் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனங்களும் (கொழும்பிலும் வெளியூர்களிலும்) 1944ம ஆண்டு அக்டோபர்மாதம் 1ம் திகதிமுதல் 4ம் திகதிவரை (இருதினங்களும் உட்பட) மூடப்படும்.

இத்தினங்களில் கூட்டுறவு ஸ்டோர்களுக்குப் மற்றவர்களுக்கும் சாமான்கள் கொடுக்கப்படமாட்டா.

சி. ரகுநாதன்,
ஸீனியர் உதவி ரிஜிஸ்திரார்,
கூட்டுறவுச் சங்கங்கள்.

கொழும்பு, 1—9—44.
G 68 18&21&25&28.9-44.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமொழி வெண்பாவும் பெரியபுராணச் சரிதங்களும்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

முதுமொழிவெண்பா என்பது திருக்குறள் அதிகாரங்களிலுள்ள ஒவ்வோர் திருக்குறட் பாக்களுக்கு எடுத்துக்காட்டிலக்கியமாக இயற்றப்பட்டமையின் முதுமொழி வெண்பா என்னும் பெயரைப் பெறலாயிற்று. இது குளத்தூர்ச் சோமேசரை முன்னிலையாக்கிப் பாடப்பட்டமையின் குளத்தூர்ச் சோமேசர் முதுமொழி வெண்பா எனப்படும். இதனை இயற்றியவர் ஆசிரியர் சிவஞானயோகிகளாவர். இதனுள் திருக்குறள் முதுமொழிகளும் எடுத்துக்காட்டிலக்கியங்களும் தமமுள ஒத்தொழுகும் நோக்கு வியக்கத்தக்கதாம். திருக்குறட் பாக்களை உள்ளடக்கிய பல வெண்பாக்கள் (இரங்கேசர் வெண்பா தினகரவெண்பா முதலியன) இருப்பினும் அவையெல்லாம் இம்முதுமொழி வெண்பாவிற்கு இணையாவனவல்ல. இவ்வெண்பாவில் வந்துள்ள பெரியபுராணச் சரிதங்களை ஆராய்வாம். அவற்றால் ஆசிரியனை சிவனடியார் பத்தி இத்தன்மையதென அறியலாம்.

### வானசிறப்பு

நேயபுகழ்த்துணையார் நீராட்டுங்
கைதளர்ந்துன
தூயமுடிமேல் வீழ்ந்தார் சோ
மேசா—ஆயுங்கால
தானந்தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காதெனின்.

(புகழ்த்துணை நாயனார் சரிதம் இங்கே கூறப்பட்டுளளது.)

### நீத்தார் பெருமை

அந்தர வாக்கால் புத்தன் சென்னியறுத்தார் சண்பைச்
சுத்தனார் தம்மன்பர் சோமேசா
—நித்த
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்.

(சாரிபுத்தன் தலையை "புத்தர் சமண கழுக்கையர்," என்னும் பஞ்சாக்கரத் திருப்பதிகப் பாடலால் இடியிடித்து உருண்டோடச் செய்த அற்புத நிகழ்ச்சியைக் கூறியபடியாம். இவ்வற்புதம் சம்பந்தப் பெருமானின் எழுத்தாளராகிய சாரூலியரால் நிகழ்த்தப்பட்டதாம்).

### புதல்வரைப்பெறுதல்

பாடினர் மூவாண்டினிற் சம்பந்தரென யாவோருஞ்
சூடுமகிழ்ச்சி செய்யே சோமசா—நாடியிடில்
தம்மிற்றம் மக்களறி வுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது

(சம்பந்தர் மூன்றும் வயதில் பாடத்தொடங்கிய அற்புதச்சரிதத்தைக் கூறியபடி)

### நடுவுநிலைமை

வேதியனுளனோ வென்றெனவாது வெண்ணெய நல்லூர்ச்
சோதவழக்கக புகழ்ந்தார் சோ
மேசா—ஓதிற்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி.

(பிராமணருள் அடிமையாவதில்லை என்று சுந்தரர் கிழப்பிராமண வேடங்கொண்டு வந்த சிவபிரானோடு வாதிட்டதைக் குறிப்பித்தவாறாம்)

### பொறையுடைமை

ஒட்டலன் செய் தீமைகொறு
தாமமென் றுரைத்தார்
கட்டியசீர் மெய்ப் பொருளார்
சோமேசா—முட்ட
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

(மெய்ப்பொருள் நாயனாரை வஞ்சனையாற் கொன்ற முத்திநாதன் சிவவேடம் பூண்டிருந்தமையால் அவனுக்கு ஓர் இடையூறும் நேரிடக்கூடாதென்று நாயனார் தமது வாயிற்காவலாளனாகிய தத்தனுக்குக் குறிப்பிட்டதைக் கூறியவாறு)

### அழுக்காறாமை

அன்பரைக் கண்டழுக்காறுஞ் சமணர்தம் வாயாற்
றுன்பமுற்றார் வெங்கழுவிற் சோ
மேசா—வன்பாம்
அழுக்காறுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுங்கியுங் கேடீன்பது

(சம்பந்தரோடு வாதிட்டுத் தோற்ற சமணர்கள் தாமே கழுவேறிய செய்தியைக் குறிப்பது)

### ஒப்புரவறிதல்

பண்டைநிலை வெண்ணி நொந்தார் பாகஞ்செய் மாறனார்
தொண்டர் மனைவியார் சோமே
சா—கண்டோம்
நயனுடையா னல்கூர்ந்தானதல் செயுநீர
செய்யாதமை கலாவாறு

(இளையான் குடிமாற நாயனார் சரிதம் கூறியபடி)

### ஈகை

மீளென்றுரைப்பளவு மிக்கு வகை பெற்றிலர் வ
தோழியற் பகையார் சோமே
சா—நீளுங்கில
இன்னதிரக்கப் படுதலிரந்தவர்
இன்முகங் காணுமளவு.

(இயற்பகை நாயனார் சரித்திரம் சூசிப்பித்தவாறும்)

### தவம்

எர்மண நல்லூர்ச சுடருள் யாருமணுகச் சிலர்தாந்
தூயநெறி நின்றயர்ந்தார் சோ
மேசா—ஓதில்
தவமுந் தவமுடையார்க்காகு மவமதனை
அஃதிலார் மேற்கொள்வது.

சம்பந்தர் திருக்கல்யாணத்தைத் தரிசிக்க வந்தவர்களெல்லாம் சோதியுட் புகுந்து பேரின்பமடையவும் சிலர் தமது தவக்குறைவால் பிந்தமை புகன்றவாறும். பின்வரும் பெரிய புராணத் திருவிருத்தம் இங்கே சிந்திக்கற்பாலது:—

கண்ணுதலார் திருமேனியுடன் கூடக் கவுணியனார்
நண்ணியது தாரததே கண்டு நணுகப்பெரு
விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலானோர்
எண்ணிலவரேசறவு தீர வெடுத்தேத்தினார்

### வாய்மை

பிள்ளையுடனுண்ணப் பேசியழைததாரன்பு
துள்ளுசிறுத்தொண்டர் சோமே
சா—உள்ளுங்கால்
பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்த்த
நன்மை பயக்குமெனின்

(சிறுத்தொண்டர் சரித்திரத்தைக் கூறியவாறும்)

### வெகுளாமை

பல்லவர் கோன்வந்து பணியக் கருணைசெய்தார்
தொல்லைநெறி வாகீசர் சோமே
சா—கொல்ல
இணரெரிதோய் வன்னவின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று

(வாகீசர் சரிதத்தைக் குறிப்பித்தவாறாம்)

# வில்லிபுத்தூரரும் மகாபாரதமும்

[திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்கள்]

(முற்றொடர்)

கன்னன், வரையாதுகொடுக்கும் வள்ளல். அவன் குந்திதேவி கன்னியாயிருக்கும்பொழுது, சூரியன் அருளால் பிறந்த பிள்ளை. ஆகவே பாண்டவர் ஐவர்க்கும் முன்னோன். கன்னன் பாண்டவர் பக்கமாகவேயிருக்கவேண்டியவன், ஆனால், அவன் துரியோதனன்பால் இளமைதொட்டுப் பயின்று வந்தவன். அவர்கள்சோற்றை உண்டு வளர்ந்தவன். உண்டசோற்றுக்கு இரண்டகஞ் செய்யக்கூடாதல்லவா?

பாண்டவர்க்கும் கன்னனின் பிறப்பு வரலாறு தெரியாது. ஏன் கன்னனுக்கே தெரியாது. பெற்றதாயான குந்திக்குமே தெரியாது, குந்தியும் கண்ணன் உணர்த்தவே உணர்ந்தாள். குந்தியும் கண்ணபிரான் கட்டளைப்படி கன்னனுக்கு அவன் பிறப்புணர்த்தினாள். குந்தியும் அன்று கன்னனைப் பெற்றநாட் போலவே உணர்ச்சி பொங்கி அவனை அணைத்து உச்சிமோந்தாள். வளர்த்தெடுக்கப் பாக்கியம் பெறாமைக்கு வருந்தினாள். பின்பு கன்னனை ஐவர்க்கும் தலைவனாயிருந்து அரசாளுமாறு கேட்டாள், அப்பொழுது கன்னன் சொன்னான், "துரியோதனன் என்னை அவனுடைய ஆருயிர்த் துணையென நம்பி, எனக்கு முடிபுனைந்து, அரசபாரந் தந்து எல்லோரு மதிப்புச் செய்ய வைத்தான்," "இதுமட்டோ! ஒருநாள், துரியோதனன் மனைவியும், யானும் ஏகாந்தமான இடத்தில் விளையாட்டிடத்திலிருக்கும் பொழுது, அவள் மேகலையின் மணிகள் கீழே விழுந்தன. துரியோதனன் எதிர்பாரா வகை அவ்வழியே வந்தான். மணிகள் வீழ்ந்து கிடக்கக் கண்டான். என்னைச் சிறிதும் சந்தேகியாது, "எடுக்கவோ! கோக்கவோ! என்றான்" என இவ்வாறு கன்னன், துரியோதனன் தன்னிடத்து வைத்திருக்கும் நம்பிக்கையையும், தலையன்பையும் எடுத்துச் சொல்லி, செஞ்சோற்றுக் கடன் கழிப்பதே தனது கடமையெனவும், அதுவே புகழுந் தருமமுமாமென்று சொன்னான் தாயார் குந்திதேவிக்கு. கன்னன் தன் தாய்க்குச் சொல்லிய விடையமைந்த பாட்டுகள்தான் இவை:—

"பெற்ற நீர் மகவன்பிலாமையோ
அன்றிப் பெரும்பழி காரியோ
விடுத்தீர்
அற்றைநாட்தொடங்கி என்னை
இன்றளவும் ஆருயிர்த் துணை
யெனக் கருதி
கொற்ற மாமகுடம் புனைந்து அர
சளித்துக் கூட உண்டு உரிய
தம்பியரும்
சுற்றமானவரும் என்னடி வணங்
கத் தோற்றமும் ஏற்றமு
மளித்தான்.
மடந்தை பொற்றிரு மேகலைமணி
யுகவே மாசறத்திகழு மேகாந்த
இடந்தனிற் புரிந்தே யானயர்ந்
திருப்ப எடுக்கவோ கோக்க
வோ என்றான்,
திடம்படுத் திடுவேல் இராசராச
னுக்குச் செருமுனைச் சென்று
செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே எனக்கினிப்
புகழும் கருமமுந் தருமமு
மென்றான."

குந்தியும் வருந்தினாள்; பின் இவ்வரம் பெற்றுத் திரும்பினாள். மாயக் கள்வனான கிருஷ்ணனும் கன்னனைக் கொல்லுதற்குச் செய்த சூழ்ச்சிகள் அளவில் வருந்த...த தருவன ...ம் இதுவும் வாய்ந்தவை.

அருச்சுனன் தந்தையாகிய இந்திரனை அனுப்பிக் கவசகுண்டலங்களைப் பெறச் செய்தான். அவன் செய்த புண்ணிய மனைத்தும் தான் பெற்றுக்கொண்டான்.

கன்னன் விஜயனின் அம்பேறுண்டு வருந்துகிறான். அப்பொழுது மாயக்கண்ணன், பிராமண வடிவம் தாங்கிச் சில கேட்கிறான். அந்த நிலைமையில், கன்னன் மகிழ்ந்து,

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
பக்குவந்தனில் வந்திலையால்
ஒவிலாதியான் செய்யும் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்க நீ உனக்கு
பூவில்வாழ் அயனும் நிகரலனென்னால்
புண்ணிய மிதனினும் பெரிதோ",

என்று தாரை வார்த்துத் தான் செய்த புண்ணிய மனைத்தையும் உதவி உயிர்விட்டான்.

வில்லிபாரதத்தில் வடமொழிச் சொற்கள் பல காணப்படுகின்றன. மணிப்பிரவாள நடையினையொத்துக் காணப்படுகிறது இவரது பாடல்கள். இவரது வருணனைகள் யாவும் கவி, மரபு, வழி வந்தவையேயாகும், இன்னும் திருக்குறள், இராமாயணம், சிலப்பதிகாரம் என்றின்னவற்றில் வந்த சில பகுதிகளில் ஒப்புமைகளும் காணப்படுகின்றன.

ஆனால், இவர் இந்த நீண்டகதையினை அமைத்த திறமை ஒரு தனி. கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் சமாதானத்தையே தருமர்வற்புறுத்தினார். "துறவம் பார்க்கிற சுற்றமில்லை", "கண்மலரிற்கைபடாதோ" என்றின்னவாய நடைமுறையில் வருமொழிகள் அமைத்துத் தக்கதாகப் பாடிய தன்மையில வில்லிபுத்தூரரின் உலகியலறியும் அவர் புலமைச் சிறப்பும் நன்கு வெளியாகின்றன. இன்னும் தானே அக்கதையினை வழிமொழியாது, கதாபாத்திரங்களின்வாயினாலேயே ஆங்காங்கு கதையினை வெளிப்படச்செய்வது கண்டு ரசிக்கத் தக்கது. இவர் இன்னும் கதாபாத்திரங்களின் குணங்கள் இயல்புகளுக்குத் தக ஆசசர் தர்மம், உலகியல வழக்கு முதலியவற்றை வெளிப்படுத்தும் முறையும் ஒரு தனியாகும்.

—வித்தியா சமாச்சாரப்பத்திரிகை.

### கடிதம்

'இந்துசாதனம்' ஆசிரியாவர்களே,

தயவுசெய்து இதன்கீழ் வரும் கடிதத்தை ஹெந்தலை (Hendala) குஷ்டரோகச் சைவப்பிணியாளர் சங்கத்தின் சார்பாக தங்கள் மேலான 'இந்துசாதனத்தில் பிரசுரிக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றேன்.

### சைவப்பிணியாளர் விண்ணப்பம்

தரும புண்ணியவான்களே!

வருடமொருமுறை வருகின்ற இந்துக்களின் புண்ணியதினமாகிய தீபாவலியன்று எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும் புது ஆடை அணியவும் இந்த நோயாளர்களுக்கு அவா இருப்பதால் தரும சீலர்களே! தங்களால இயன்ற பொருளுதவி புரியுமாறு தாழ்மையாய் நோயாளிகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்
சைவப்பிணியாளர் சங்கத்தின்
காரியதரிசி மெ. இராமசாமி
ஹெந்தலை குஷ்டரோக வைத்தியசாலை
வத்தளை (Wattala)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயானத்திற் கலகம்
### ஒருவர் சுடப்பட்டார்
### மூவர் படுகாயப்பட்டனர்

சென்ற 26ம் தேதி செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்தில் மாலை 7½மணியளவில் கழுவவகுப்பைச் சேர்ந்த சிலர் முருகன் மனைவியாகிய வள்ளிப்பிள்ளை என்பவளின் பிரேதத்தைத் தகனஞ்செய்ய ஆயத்தஞ் செய்யும் பொழுது அருகிலுள்ள ஒரு தென்னந்தோட்டத்திலிருந்து துப்பாக்கிப்பிரயோகஞ் செய்யப்பட்டது. இதன் காரணமாக ஆரியகுளத்திலுள்ள முதலி சின்னத்தம்பி உட்னே உயிர் நீத்தான், மற்றும்பொன்னையா, செல்லையா, அந்தோனி என்னும் மூவரும படுகாயத்துடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இது சம்பந்தமாகப் பொலிசார் இ. ராசரத்தினம், வி. நடராசா என்னுமிருவரைக கைதுசெய்திருக்கின்றனர் என்று அறியப்படுகிறது.

## விடுமுறைக்குச்சம்பளம்

அரசாங்க தினச்சம்பள வேலையாட்களுக்கு விடுமுறைநாட்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கான திட்டமொன்று நடைமுறைக்குக கொண்டுவரப்பட விருக்கிறது, சில சந்தர்ப்பங்களில் தினச் சம்பள தொழிலாளிகள் சுகவீனம் காரணமாக ஓய்வு எடுத்தால் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது இத்திட்டப் பிரகாரம் அவர்களுக்குச் சம்பளத்துடன் 14 நாள விடுமுறையும வழங்கப்பட வேண்டுமென்று அதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றனர். இது அனுமதிக்கப்படுவதால் யுத்த காலத்தில் உற்பத்தி குறைந்துவிடாது தடுப்பதற்காக வழமையாய்ச் சம்பளம கிடைக்குமென்பதற்காகத் தொழிலாளர்கள கட்டாயமாக விடுமுறை பெற்றுக்கொள்ளும்படி இருக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## ஜெர்மன் எதிர்த்தாக்குதல் முறியடிக்கப்பட்டது

லண்டன் செப் 26—

எபினல் பகுதியில் அமெரிக்கர் பிரமாண்டமான ஒரு வலுத்தாக்குதலை ஆரம்பித்திருப்பதாக ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. நேசதேசக் காரியாலயத்தில் இன்று வெளியிடப்பட்ட அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:— ஈண்ட்ஹோவன் —நிஜ்மெஜனுக்குக கிழக்கே நேசதேசத் துருப்புகள் மேலும் வெற்றிகள் ஈட்டிககொண்டிருக்கின்றன. ஹெலமன்ட் டேர்னே ஆகிய நகரங்கள கைப்பற்றப்பட்டன. வடக்கே டலமைலதூரம் நேசதேசப்படைகள முன்னேறியிருக்கின்றன. நமது உதவிப் பாதைக்கெதிராக சில்டெல் பகுதியில சத்துரு நடத்திய தாக்குதல்களெல்லாம் முறியடிககப்பட்டன. டேர்னஹோர்ட் கால்வாய்க்கூடாக ஒருபாலமுன்ன அமைப்பதில வெற்றிபெற்றுள்ளனர், ஆச்சனுக்கு வடபாகத்திலிருந்து மோர்தது பளளத்தாக்குவரை நிலைமையில சொற்ப மாறுதலே ஏற்பட்டது.

## மஞ்சூரியாமீது தாக்குதல

லண்டன செப் 26—

நேசதேச விமானங்கள மஞ்சூரியாவை மீண்டும தாக்கியதாக டோக்கியோ ரேடியோ அறிவித்தது. உயர்ந்து பறக்கும கோட்டைவிமானங்கள மஞ்சூரியாவிலுள்ள இலக்குகளைத் தாக்கினவென்று வாஷிங்டனில அமெரிக்க யுத்த காரியாலயம் அறிவித்தது.

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

### "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை"

என்தாயார் இப்படிக் கேட்டபோது என் சித்தங் கலங்கியது, தேகம் சோர்வடைந்தது, கண்ணீர் பெருகியது, "அம்மா, சொல்லுகிறேனென்று மனவருத்தப்படாதீர்கள்; நீங்கள் சொல்வது முழுவதும் நியாயம்; மேலும என்னுடைய நன்மையையிட்டே சொல்லுகிறீர்கள்; அவரென்னை விவாகஞ் செய்யவில்லையென நீங்கள் சொல்வதும் நிசந்தான்; ஆனுல் அவர் இந்தப் பாவியைத தம் மனைவியென்றும் நான் அந்தப் புண்ணியவானை என்பர்த்தாவென்றும பரஸ்பரம் நிச்சயித்தாய்விட்டதும் நிசமல்லவா தாயே; எனக்கு இப்பொழுதும் நினைக்க வயிறெரிகிறதே; இந்தக் கருமியைக் காணு மட்டுமல்லவா, அந்த அவருடைய ஆவி நீங்காமலிருந்தது; தம்முடைய அந்திய காலத்தில அவா சொன்ன அந்த ஒரு வார்த்தையை நான் இந்தப் பிறப்பிலல்ல ஏழு பிறப்பிலும் நினைத்து நடக்கவேணடுமல்லவா அம்மா, ரஞ்சிதம உன மானத்திற்குப் பங்கம வந்தால, அதற்குமுன உன்னுயிரை விடு என்று செத்துத தெய்வமாகப் போன என் பர்த்தா சொன்னரே, அதனை மறப்பேனு? மறந்தால நான் துரோகி, சண்டாளி, தாசியாவேனல்லவா...." என்று கண்ணீர் பெருகச் சொல்லும்போது, விசுவநாதன் அவளைப் பரிவுடன பார்த்து, "என்ன இரஞ்சிதம், நீ இப்பொழுது சொல்லுவது உன்னுடைய வரலாறுதானு" என்று ஆச்சரியத்தோடும் ஆர்வத்தோடுங் கேட்க; "ஆம்,ஐயா,என்னுடையதுதான் சொல்லி முடிக்குமவரை பொறுமையோடு கேளுங்கள்" என்று சொல்லிப் பின்னருங் கூறுகிறுள்; "என் அன்பரை மறந்து, என் பிராணநாதர் அந்திய காலத்திற் சொன்ன வாக்கைமீறி, உந்த இராமச்சந்திரனல்ல, அந்தத் தசரதச் சக்கரவர்த்தியின் தவப்புதல்வனுகிய ராமச்சந்திரனென்றாலும் என்மனம் இசையுமா? கற்பெனப்படுவது சொற்றிறம்பாமையென்று சொல்வார்களே; நான அவரை என்னுடைய உயிர்த் துணைவரென்றும், அவர் என்னைத் தம்முடைய பிரிய பத்தினியென்றும எங்கள் உள்ளத்தில் மதித்துப் பாராட்டியிருந்த அந்த வாழ்க்கையே எனக்குப் போதும் அம்மா; இந்தத் திடமான எண்ணம், அந்த நாராயணனுடைய அருள் கிடைக்குமானுல் அடுத்த பிறவியிலாவது எங்களைக கைகூட்டி வைக்குமென்பது எனது நம்பிக்கை; அப்படியிலலாமற்போனுலும் எனக்குக் கவலையில்லை; அவரும் இப்பொழுது நல்ல கதியையடைந்திருப்பார்; நானும் மறுமையில நலல கதியையடைவேன்; இப்படியெல்லாமிருக்க, சிவனை பயிலாமே நினைத்தவாறு சிறுபிள்ளைகளாகிய எங்களுக்குப் பத்திபுகட்டி எங்களை நல்லவழியில் நடக்கச் செய்யவேண்டிய முதுகுரவராகிய நீங்களும் இப்படிப் பொருந்தாக கருமத்தைச் செய்யச் சொல்லிக் கேட்கலாமா? தாயே நான உங்களுக்குத் தெரிந்து தெரியாமல ஏதும்பிழை செய்தால் பொறுத்துக்கொள்ளுங்கள், இந்த ஒரு கேள்வியையுங் கேளாதீர்கள்; உங்களுக்குக் கோடிநமஸ்காரமென்று சொல்லி இருகையையுமெடுத்துக கும்பிட, என அருமையான அன்னை தம கைகளால சேர்த்து என் கையைப்பற்றித் தம்மை நான் [illegible] தடுத்து, சஞ்சலப்பட்டு "கண்ணே, நீ கலங்காதே, நான் இனியொருபோதும் இப்படி உன்னைக் கேட்கமாட்டேன்; மற்றவர்கள கேட்கவிடவும்மாட்டேன்; உன் அப்பருக்கும் மாமனுருக்கும் நான் சமாதானஞ் சொல்லிக்கொள்ளுகிறேன்; நீ அழாதே" என்று என்னைத் தேற்றிவிட்டு அவ்விடம்விட்டகன்றுர். நான் சொன்ன நியாயங்களைத் தாயார் என் தகப்பனுருக்கும் மாமனுருக்குஞ் சொல்ல. அவர்கள் கேட்டு மறுத்துப்பேச நியாயங் காணுதவர்களாய், என் வைராக்கியத்தை மெச்சி, முன்னரைக் காட்டிலும என்னிடத்தில அதிக பரிவுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் எனமேற் பாராட்டிய அன்பினுல் என கவலையும சிறிது ஆறியது."

### நீர் மனுஷனு? மிருகமா?

"ஐயா,இப்படிப் பத்துமாசங்கள் கழிந்தன; இதறகிடையில் என் மாமனுருக்குப் பல இடங்களிலிருந்து பலர் பெண்பேசி வர, என் மாமனர் உடன்படாது மறுத்துத் தாம் இனிமேல் விவாகஞ் செய்வதேயில்லையென்ற பிடிவாதத்தோடிருந்தார்; ஒரு பெண்ணின் பகுதியார் என மாமனுரிடம நேரில் போய்ச் சம்பந்தம்பேசப் பயந்து என் அப்பர்மூலமாகப பேசுவிக்க நோக்கங்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்து தகப்பனுரிடஞ் சொல்ல, தகப்பனுர் தாயாருடன் யோசிக்க, தாயார் தம தமையனர் உடன படாரென்று சொல்லித் தடுத்துவிட்டார்; இப்படியாக, எனது பெற்றேர் தாங்கள பொருள்முழுவதையும் அபகரித்ததற்காக, என மாமனுரைக் கலியாணஞ் செய்யவிடாது தடுக்கிருர்களென்ற அபவாதம ஊரிலே பிறந்தது; இதனைக்கேள்விப்பட்டு என் பெற்றேர் பெரிதுங் கவலையடைந்தனர்; ஒருநாள் என் தகப்பனுர் மாமனுரைப் பார்த்து "மைத்துனரே, அறுபது எழுபது வயதிற்கு மேற்பட்டவர்களகூட இந்தவூரிலே எங்கள் சாதியில் புநர்விவாகஞ் செய்கிருர்கள்; உமக்கெனிலோ அதிகம் வயசு போகவில்லை; யாரும கல்யாணம பேசவந்தால் நிராகரித்துத் தள்ளிவிடுகிறீர்; ஆணபிள்ளை தாரமிழந்தால பிறகுந் தாரங்கொள்ளலாமென்றது எங்கள் சமய சம்பிரதாயம்; ஆனதால ஒதத மாமிலே வேறுகோத்திரத்திலே ஒரு பெண்ணை எடுப்பதனுல் எவ்வகையான குறையுமில்லையே" என்று இதமாகச் சொன்னுர். இதனைக்கேட்ட என் மாமனுர் பெருஞ் சிரிப்புச் சிரித்து "என்ன, நீராயிருந்தும் வீணகதை பேசுகிறீர்; உமக்கும் பைத்தியமா? என ஒரேயொரு அருமையான பிள்ளை போய்விட, அந்தப் பிள்ளையைப் பிரிந்த துயரத்தால் நோய்வாய்ப்பட்டு என பத்தினியும் போய்விட, பிள்ளைக்கென்று நியமிக்கப்பட்ட பெண்கைம்மையாயிருக்க,நான்கல்யாணஞ் செய்வதென்றுல் நான என்ன மனுஷனு? மிருகமா? கிழக்கே யுதிக்குஞ் சூரியன் மேற்கே யுதித்தாலும் உந்தக் கருமம் மாத்திரம் நடக்கப்போவதில்லை; வேணுமானுல் இருந்துபாரும" என்று வெறுப்போடு சொன்னுர். "மைத்துனரே, அறியாமையால கேட்டுவிட்டேன்; கேட்டது என்மேற குற்றம; பொறுத்துக்கொள்ளவேண்டும்; இப்படியே யிருந்துவிட்டால விசேஷந்தான; ஆனுல கௌசிகர்போன்ற முனிவரையும பெண்ணுசை தப்பிப்போக விடவில்லையென்று சொல்வார்கள" என எனது தகப்பனுரும் சிரித்துக கொண்டு சமாதானஞ் சொன்னுர்.

(வரும)

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

( † இசைத்தட்டு )

### வெள்ளி செப் 29

காலை: 7.45கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே ராமஸ்வாமி பாட்டு 9 முடிவு

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கே ராமஸ்வாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 கே கோமதி பாட்டு 5-40 குரான்-ஷரீப் 6 செம்பொன்னுர்கோயில் எஸ் ஆர் ஜி குஞ்சிதபாதம் சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 கறவை மாடுகள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7.45 ராமு சோமு 8 செம்பொன்னுர்கோயில் எஸ் ஆர் ஜி குஞ்சிதபாதம்பிள்ளைசகோதரர்கள் நாகஸ்வரம் 8-45 கே கோமதி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 உலகவிவகாரங்கள் (ஆங்கிலம்) 10 திரை இசை † 10-30 முடிவு.

### சனி செப் 30

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 தனம்மாள் வீணை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திரைகானம் † 9 முடிவு.

1 கே வி தியாகராசன் வயலின் 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கலிவரின் யாத்திரை † 2 தமிழில செய்திகள் 2.05 பாலக்காடு கே கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2-30 முடிவு.

மாலை 5: கே வி தியாகராஜன் வயலின் 5-40 திருவரங்கக்கலம்பகம் 6 பாலக்காடு கே கிருஷ்ணமூர்த்தி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 உழவன் முன்னேற்றம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸிலுள்ளபடி 9.15 திருப்பாம்புரம சுவாமிநாதபிள்ளை புல்லாங்குழல் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள 9-45 எஸ் பாலகிருஷ்ணன் பாட்டு 10 இசைவேளை † 10-30 முடிவு,

### ஞாயிறு அக் 1

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 கே எஸ் நாரயண ஐயங்கார் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 இசைக்கதம்பம் 9 முடிவு.

12 மனோன்மணி † 12.30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில்செய்திகள் 2-05 இசைவகை 2-30 முடிவு.

மாலை: 5 ஆர் நாராயணஸ்வாமி பாட்டு 5-40 தேவாரானை 6 கே எல் ரங்கதாஸ் புல்லாங்குழல் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 யுத்தகால பிரயாணம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 முன்னேற்றம் 8 ஆர் நாராயணஸ்வாமி பாட்டு 8,30 கே எல் ரங்கதாஸ் புல்லாங்குழல் 9 யுத்தத்திற்குப்பின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30லண்டனிலிருந்து செய்திகள் 9-45 காவடிச்சிந்து 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் அக் 2

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 குற்றாலக்குறவஞ்சி 6 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி ஆர் ராமநாதன்பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கே ஆர் செல்லமுத்து பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 டி ஆர் ராமநாதன்பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 டி வேணுகோபால் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 திரைகானம் † 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 செய்திச் சித்திரம் 8 கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 சுதந்திரத்துடன அஸ்திவாரம் 3 10 05 இசைக்கதம்பம் †10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாகவி ஷேக்ஸ்பியர்

4-ம் பக்கத் தொடர்ச்சி

தொமஸ்லூசி தோட்டக்காரனிடம் கூறினார்.

அதன்பின் தம்முடைய உடைவாளை அவர் இடையில் தரித்துக் கொண்டு, தம்முடைய நீதி மண்டபத்துக்குச்சென்றார். அப்பொழுது அவருடைய மனைவியும் மக்களும் வேடிக்கை பார்க்க அங்கே வந்து உட்கார்ந்து கொண்டார்கள். மாளிகைக்குவெளியே இரைச்சல் அதிகமாயிருந்தது. மானைத் திருடியவனை இரண்டு காவற்காரர்கள் இறுகப் பிடித்திருந்தார்கள். இறந்துபோன மானை ஒரு வேலைக்காரன் தூக்கி வந்தான். இன்னொரு வேலைக்காரன் திருடனுடைய வில்லை வைத்திருந்தான். இவர்களைச் சூழ்ந்து பலர், "இறைவன் திருவுளம் என்னவோ" என்று பேசிக்கொண்டு வந்தார்கள்.

ஸேர். தொமஸ்லூசி அந்தத்திருடனைப் பார்த்தார். அவனுக்கு அப்பொழுது சுமார் இருபது வயதிருக்கும். அழகான உருவம், ஆற்றல் அமைந்த மேனி. அவனுடைய கேசம் அதிசுருளமாக வளர்ந்திருந்தது, அவனுடைய முகத்தில் அப்பொழுதுதான் மீசையும் தாடியும் அரும்பிக்கொண்டிருந்தன. அவனைக் கண்டோர் யாரும் அவனைத் திருடன் என்று கூறமாட்டார்கள். அவ்வளவு கம்பீரமான தோற்றமுடையவனாயிருந்தான்.

ஸேர். தொமஸ்லூசி அவனிடம் "யாரடா நீ? உன் பெயரென்ன?" என்று கேட்டார். அவன் தன்னுடைய பெயரைச் சொன்னான்.

அதன்மேல், ஜமீந்தார், "அடா! நீ மானைத் திருடியதாகக் கூறுகிறார்கள், அதற்கு என்ன சொல்லுகிறாய். அடா! யார் யார் உன்னுடன் சேர்ந்தவர்கள்? அவர்களுக்கும் சரியான தண்டனை தருகிறேன். அடா! என்ன சும்மா நிற்கிறாய்? ஆட்டும் இந்தப் பயலுக்கு முப்பது அடி தட்டுங்கள்" என்று கூறினார்.

அப்பொழுது அவன் இந்த விதமான தண்டனையை எதிர்பார்க்கவில்லை. அவன் அப்படியே திகைத்துப் போனான். ஆனால், அடுத்த நிமிஷத்தில் "ஐயா! அடித்தண்டனையா! இது வேண்டாம், என்னைச் சிறையில் போடுங்கள், அல்லது எனக்கு அபராதம் விதியுங்கள். எந்த வேலையானாலும் செய்து கொள்ளுகிறேன். இந்த அடித்தண்டனைமட்டும் வேண்டாம்" என்று கூறினான்.

ஆனால் லூசியின் மனம் இளகவில்லை, அவனை முக்காலியில் கட்டி அடிக்கவே செய்தார்கள். அதன் பின் அவன் தன்னுடைய வீட்டுக்குப் போனான், அந்த அவமானத்தைக் குறித்து வெகு நேரமாகச் சிந்தித்தான். அவருக்கு என்ன அவமானம் ஏற்படுத்தலாம் என்று யோசித்தான், அவரோ ஜமீந்தார். அவருக்கு என்ன செய்ய முடியும்? ஆமாம், அவருடைய தோட்டத்தில் புகுந்து அன்று செய்தது போல, மறுபடியும் மானைக் கவர்ந்துவிட்டால் போதும்! அதைவிட அவருக்குப் பெரிய அவமானம் வேறொன்றும் கிடையாது. ஆனால் அப்படிக் கவர்வதும் முடியுமோ? அங்கே காவற்காரர்கள் அதிகமாயிருக்கிறார்களே! அதற்கு இடமில்லாமல் அதோ ஏதாவது?

"ஆமாம், அதற்காகச் சும்மா இருந்து விடுவதா? அது முடியவே முடியாது. அவருக்கு ஏதேனும் அவமானம் உண்டாக்கியே தீர வேண்டும்" என்று அந்த இளைஞன் எண்ணினான்.

அவன் சிறுவனாய்ப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த பொழுது, ஆசிரியரைப்பற்றிக் கேலியாகச் சில பாட்டுக் கட்டியிருந்தான். அந்தவிஷயம் இப்பொழுது அவனுடைய ஞாபகத்துக்கு வந்தது. அவ்வளவுதான்; அவனுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. ஆகா! அதுதான் யோசனை! என்று ஆனந்தம் கொண்டான். "ஆமாம், அவரைக் குறித்து ஒரு பாட்டுச் செய்தால், அதைக் கேட்டதும் ஜனங்கள் எல்லோரும் அவரைக் குறித்துச் சிரித்துக் கேலியாகப் பேசுவார்கள். அவருக்கு மானத் திருட்டைவிட— அவ்வளவு சேமமாகும்" என்று எண்ணினான்.

ஆனால் அவனுக்குப் பாட்டுச் செய்யத் தெரியுமோ? தெரியாது. அவன் இதுவரை அந்தக்காரியத்தில் ஈடுபட்டதேயில்லை. ஆனால் என்ன? அவர்மீது பாடித்தான் ஆகவேண்டும். அப்படியே அவர் மீது சில பாடல்களைச் செய்து முடித்தான். அவைகளைத் தன்னுடைய தோழர்களிடம் காட்டினான். அவர்கள் எல்லோரும் அவற்றைக் கேட்டுச் சிரித்தார்கள். அவ்வளவுதான் அதன்பின் எங்கே பார்த்தாலும் அந்தப் பாடல்கள் பரவிவிட்டன.

ஆனாலும் அந்த இளைஞன் அத்தோடு விடவில்லை. அவரைப்பற்றி ஊரார் சிரிப்பது அவருக்குத் தெரியுமோ, அந்தப் பாடல் அவரிடம் போய்ச் சேர்ந்ததோ, என்னவோ? ஆதலால் இரவில் வெகுஜாக்கிரதையாகப் போய், அவருடைய மாளிகையின் வெளிக்கதவில் அந்தப் பாடல்களின் பிரதி ஒன்றை [illegible]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இணுவில் முருகர்-சீனிவாசகம்
வழக்காளி.

இல. 468 D. C. J.
எதிராக.

இணுவில் 1. கன்னித்தம்பி சீனி கைம்பெண் சின்னத் தங்கைச்சி
தாவடி 2. சின்னப்பு குளந்தைத் தம்பி
தாவடி 3. ஆறுமுகம் இளைய தம்பியும்
4. தெய்வானைப்பிள்ளை
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 468ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1944ம் ஐப்பசிமீ 18ந் திகதி புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

உடுவில் இறை தூமலை பா. நில இலா. 7½யும் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும், ஒரு தென்னை மரமும், எல்லை கிழக்கு கை ஒழுங்கை, வடக்கு முதலாம் எதிரியின் ஆதனம், மேற்கு குஞ்சர் முத்துவின் ஆதனமும் கிணறும் வழிவாய்க்காலும் சிவசம்பு பெண் தங்கமுத்துவின் ஆதனமும், தெற்கு தங்கமுத்துவின் ஆதனமும் வீரவாகு பெண் தெய்வானையின் ஆதனமும், இது அடங்கலில் தென்னைமரம் பிறநீங்கலாக சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

க. பொன்னப்பா,
கொம்மிஷனர்.

இணுவில், 23-9-44.
Mis 127, 28-9-44

## பெயர் மாற்றம்

வேலணை மண்கும்பான் இராமநாதர் தேவதாசனாகிய நான் 1944-ம் ஆண்டு செப்டம்பர் மீ 24-ந் தேதியாகிய இன்று தொடக்கம் எனது பெயரை இராமநாதர் தேவராசா என மாற்றி வைத்துக்கொண்டேனென்றும் இனிமேல் எவ்வகையான உறுதி சாதனங்கட்கும் மற்றும் எந்தக் கருமங்கட்கும் இ. தேவராசா எனவே கையொப்ப மிடுவேனென்றும் இதனால் சகலபேருக்கும் தெரிவிக்கிறேன்.

மணகும்பான் — இங்ஙனம்
23—9—44 — இ. தேவராசா

Mis 124 25&28-9-44

## ஜப்பானிய கடற்படைச் சேதம்

செப்டெம்பர் 20, 21 திகதிகளில் மணிலா குடா பகுதியில் நடைபெற்ற சண்டையின் முடிவுகள் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றன அவை பின்வருமாறு:—

"ஆழ்த்தப்பட்ட கப்பல்கள் 40 சிறிய கப்பல்கள் 6, மேலும் 11கப்பல்கள் அனேகமாக ஆழ்த்தப்பட்டிருக்கலாம். சேதமாக்கப்பட்ட கப்பல்கள் 35. சேதமாக்கப்பட்ட சிறிய கப்பல்கள் 11. சண்டையில் நாசமாக்கப்பட்ட விமானங்கள் 169. தரையில் நாசமாக்கப்பட்ட விமானங்கள் 188.

நமது கப்பல்களுக்கு எவ்வித சேதமோ, நஷ்டமோ கிடையாது" என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மணிலா துறைமுகத்திலிருந்த கட்டிடங்கள், கிடங்குகள், கடங்குகள் ஆகியவை பலமாகத் தாக்கப்பட்டன. அமெரிக்காவுக்கு 11 விமானங்கள்தான் சேதம்.

### கடற்படை எங்கே?

ஜப்பானியக்கடற்படை பிலிப்பைனஸிலிருந்து பின்வாங்கிப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அமெரிக்காவின் சமீப நடவடிக்கைகளினால் பிலிப்பைனஸிலிருந்த ஜப்பானிய விமானப்படை 'முறிந்து' போய்விட்டதாகவும் பஸிபிக்கின் பிரதம தளகர்த்தரான அட்மிரல் செஸ்டர் நிமிட்ஸ் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறியுள்ளார்.

பிலிப்பைனஸில் சமீபத்தில் நடைபெற்ற தாக்குதல் ஆரம்பத்தில் சீக்கிரம் படையெடுப்பு நடைபெறும் என்பதற்கு [illegible] என்பதாக லண்டனில் நம்பப்படுகிறது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சங்கானை மேற்கு (1) சீனிவாசகம் வயித்திலிங்கமும் (2) வயித்தலிங்கம் பெண் செல்லம்மாவும் வழக்காளி
எதிராக

சங்கானை மேற்கு காலஞ்சென்ற தம்பர் பெருமாளின் கோட்டால் நியமிக்கப்பட்ட தத்துவகாறி பெ. ஆறுமுகம் கைம்பெண் மீனாட்சி
எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 1329ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1944ம் வருஷம் ஐப்பசி மாசம் 14ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5½ மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்.

சங்கானை மேற்கு இறை பாலைக் கலட்டிநிலைப்பரப்பு நாலும் வீடும் கிணறும் செய்பயிர்களும் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஆறுமுகம் கைம்பெண் பொன்னாச்சிக்குரிய ஆதனம், வடக்கு வயிரமுத்து பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம், மேற்கு தம்பர் சின்னையாவுக்கும் பெண் ஞானப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள், தெற்கு கை ஒழுங்கை. இதில் மேற்கு எல்லைக் காணிக்குரிய கிணற்றில் பங்கு பிறநீங்கலாக மிகுதி அடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொம்மிஷனர்.

13-9-44.

Mis 122 25 & 28-9 44

## மட்டக்களப்பில் சமபல பிரதிநிதித்துவ கோரிக்கை

சென்ற 22-ந்திகதி மட்டக்களப்பில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழர்காங்கிரசை ஏகமனதாக வரவேற்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அக்கூட்டத்திற்கு 2000க்கு மேற்பட்ட ஜனங்கள் வந்திருந்தனர். எதிர்கால அரசியலில் ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினர்மேல் ஆதிக்கஞ் செலுத்தாத கொள்கையையும் சமபல பிரதிநிதித்துவ கோரிக்கையையும் அப்பொதுக் கூட்டம் ஆதரித்தது.

சமபல பிரதிநிதித்துவ திட்டத்தில் கிழக்குமாகாணத்துக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று அக்கூட்டம் வற்புறுத்தியது.

கிழக்குமாகாணத்திலுள்ள பிரதிநிதிகள் அகில இலங்கைத் தமிழர் காங்கிரசின் கோரிக்கைகளையும், கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் ஆதரிக்க வேண்டுமென ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. எஸ். எம். வேலுப்பிள்ளை தலைமை வகித்தார். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அகில இலங்கைத் தமிழர் காங்கிரசுக்குத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## பெற்றோர் ஆசிரியசங்கக் கூட்டம்

### மகாத்மாகாந்தியடிகளின் ஜெயந்திவிழாக் கொண்டாட்டம்

காரைநகர் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலைத் திருநாவுக்கரசுநாயனார் மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை (2-10-44) மாலை ஆறுமணியளவில் ஆரம்பமாகி நடைபெறும்.

ஆரம்பத்தில் கிராம அபிவிருத்திக்குரிய விஷயங்களில் மாணவர்களின் அப்பியாசங்களும் பின்னர் மகாத்மாகாந்தியடிகளின் வாழ்க்கை வைபவமும், அடிகளின் வாழ்க்கையைப் பின்பற்றுவதால் காரியசித்தியடையக்கூடிய வழிவகைகளைப்பற்றியும் சில அறிஞர்கள் உபந்நியாசஞ் செய்வார்கள், அன்றியும் காரைநகர் இந்துக்கல்லூரி ஆசிரியர் திருவாளர் செல்லையாபிள்ளை அவர்கள் சமய அறிவைப் பெருக்குவதற்குரிய ஓர் கதாப்பிரசங்கமுஞ் செய்வார்.

—கடித.

## விமான விபத்தில் ஐசனோவர்

லண்டன், செப் 23

இன்று பாரிஸிலிருந்து ஒலிபரப்பப்பட்ட அமெரிக்க ஒலிபரப்பு நிலயம் கூறியதாவது:- சமீபத்தில் ஐசன்ஹோவர் போர் முனைக்குச் சென்று திரும்புகையில் அவர் விமானம் தவறுதலாக ஒரு [illegible] சதுப்பு நிலத்தில் இறங்கிவிட்டது, இதனால் அவர் முழங்காலில் சிறு ஊறுபாடேற்பட்டுள்ளது. விமானம் ஓட்டி அவர் கால்களை வெளியே இழுத்து உதவிசெய்தார். அவர் இப்பொழுது பூரண சுகமாயிருக்கிறார்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 28, September 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org